திருவாரூர்.

**CC.No.89/2024**

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 5 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | வயது | 35 |
| தந்தை பெயர் | அய்யாசாமி | ஜாதி | |
| தொழில் | உதவி ஆய்வாளர் - Q பிரிவு குற்ற புலனாய்வு துறை தஞ்சாவூர். | மதம் | |
| ஊர் | தஞ்சாவூர் | தாலுக்கா | |

( 1,3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 2 வது எதிரி சார்பாக 317 குவிமுச ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி கண்ணனை தெரியும். கடந்த 13.07.2019 ம் தேதி திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் 14.00 மணியில் இருந்து தலைமை காவலர்கள் ராஜராமன் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோர் காணுர் சோதனை சாவடியில் பணியில் இருந்தனர். நான் அன்றைய தினம் 17.00 மணிக்கு காணுர் சோதனை சாவடிக்கு சென்று மேற்படி தலைமை காவலர்களுடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி TN 50 AA 9567 பதிவெண்கொண்ட Hero passion pro என்ற இருச்சக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் வந்தார்கள். மேற்கண்ட வாகனத்தை நிறுத்தி தணிக்கை செய்தபோது ஆஜர் எதிரிகள் மற்றும் இரண்டாவது எதிரி கண்ணன் குடிபோதையில் இருந்தனர். நான் அவர்களது பெயர், முகவரி கேட்டு எனது பேனாவை எடுத்து எழுத முற்பட்ட போது வாகனத்தை ஓட்டிவந்த ஆஜர் எதிரி செந்தில்குமார் எனது பேனாவை பிடிங்கி தூக்கி வீசிவிட்டார். மேலும் நீ யாருடா தேவடியா, குச்சிகாரி மகனே என்னை மறைப்பதற்கு என்று அசிங்கமாக திட்டினார். என்னுடன் பணியில் இருந்த தலைமை காவலர் கிருஷ்ணகுமார் ஏன் இப்படி பேசுகிறீங்க என்று கேட்டதற்கு மற்ற இரண்டு எதிரிகளும் அப்படிதான் பேசுவோம் தேவடியா, குச்சிகாரி மகனே உங்களால்

என்ன பண்ணமுடியும் என்று திட்டி, நாஙகள் நினைத்தால் உங்கள் மூன்று பேரையும் குத்தி கொல்ல முடியும் என்று ஆவேசமாக பேசினார்கள். நான் அவர்களை சமாதானம் செய்தபோது நீ யாருடா தேவடியா, குச்சிகாரி மகனே இங்க பேச என்று சொல்லி அவர்கள் வந்த வாகனத்தில் வைத்திருந்த பீர்பாட்டிலை எடுத்து உடைத்து இனிமேல் இந்த வண்டியை நிப்பாடினா உங்களை குத்தி கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அவர்கள் யார் என்று விசாரணை செய்ததில் அவர்கள் ஆண்டிபாளையத்தை சேர்ந்த பூங்காவனம் மகன் செந்தில்குமார் மற்றும் கதிர்வேல் மகன்கள் கண்ணன் , சிவா என்பது தெரியவந்தது. நடந்த சம்பவம் குறித்து தலைமை காவலர் ராஜாராமன் தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை விசாரணை செய்த காவல் உதவியாளரிடம் நான் அன்றையதினம் பணியில் இருந்ததற்கான பணிபதிவேட்டை கொடுத்தேனா என்றால் இல்லை. வாகனத்தை தணிக்கை செய்த புத்தகத்தை சமர்பித்தேன். உடைந்து போன பீர் பாட்டில் சம்பவ இடத்தில் இருந்தது என்றால் சரிதான். அந்த உடைந்து போன பீர் பாட்டிலை உதவி ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பிறகு எவ்வளவு நேரம் நான் சம்பவ இடத்தில் பணியில் இருந்தேன் என்றால் அரை மணி நேரம் பணியில் இருந்தேன். மேற்படி விவரத்தை என்னை விசாரணை செய்த காவல் ஆய்வாளரிடம் கூறினேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பிறகு என்னோடு பணியில் இருந்த மற்ற காவலர்கள் எவ்வளவு நேரம் பணியில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை திட்டவும் இல்லை, மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் சம்பவ இடத்தில் பணியல் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/--

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவாரூர்.